**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.55
https://ngmtamil.in/

# தமிழர் கட்டிடக்கலையின் சிறப்புகள்

**முனைவர் ந.சுமதி,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபி. Sumiyogesh2024@gmail.com

**முன்னுரை**

பழந்தமிழ் மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் நமக்கு உணர்த்துபவை சங்க இலக்கியங்கள் ஆகும். தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றையும், சங்க இலக்கியமும் கட்டடக்கலையும் பற்றி இங்கு காண்போம்.

சங்க இலக்கியத்தில் கட்டிடக்கலை பெரும் வளர்ச்சியை தோற்றுவித்தன. “சங்க இலக்கியம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியல் கருத்துநெறிகளைத் தம்முள் பொதித்து வைத்துள்ள ஓர் அரும்பட்டகம்”(1) என்பதை காணலாம்.

“சாதி சமய வேறுபாடுகள் வளராத சமூகம் சங்க காலச் சமூகம். இத்தகைய சிறப்பு பெற்ற சங்கச் சமூக இலக்கியங்களை மேலை நாட்டறிஞர் போற்றுகின்றனர். சங்க இலக்கியங்களால் தமிழ்ச் சமூகம் பெருமை பெற்றது எனலாம்”(2).

**கட்டடக்கலையில் திருமுருகாற்றுப்படையின் சிறப்பு**:

பத்துப்பாட்டினுள் - முதல் பாட்டாக அமைந்திருப்பது திருமுருகாற்றுப்படை ஆகும் இதுவும் ஒரு ஆற்றுப்படை நூலாகும். பத்துப்பாட்டினுள் ஐந்து,ஆற்றுப்படைகளாகத் திகழ்கின்றன.ஒருவனை புரவனிடத்தில் போகும்படியாக சொல்வது ஆற்றுப்படை என்பர்.

தொல்காப்பியம் கூறும் ஆற்றுப்படை இலக்கணம் பின்வருமாறு :-

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீ இச்
சென்று பயன் எதிர சொன்ன பக்கமும்”(3)

சில நூல்களில் மதுரைக்கும் தெற்கில் திருப்பரங்குன்றம் என்றும் தென்மேற்கில் திருப்பரங்குன்றம் என்றும் உள்ளது. எப்படியாயினும்,தெற்கு,தென்மேற்கு, மேற்கில் உயர்ந்த மலைகள்,உயர்ந்த அமைப்பு இருப்பின் சிறப்பு ஓங்கும் என்பது மனை இலக்கணமாகும்.

**கட்டிடக்கலையின் மாண்புகள்:**

திருமதில்வாயில் போர் இல்லாத வாயிலாகத் திகழ்ந்தது.மதிலின்மேல் கொடிகள் ஆடிக்கொண்டிருக்கும்.மதிலின் வாயில் பந்தையும்,பாவைகளையும் தொங்க விட்டிருப்பார்.

“ வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர் தேய்த்த போர் அருவாயில்”(4).

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நல்ல வாயில் என்பது உச்சப்பகுதியில் இருப்பதாகும்.ஒன்பது பாகமாக பிரிக்கப்பட்டு. அப்படிப்பட்ட அருமையான வாயிலுடைய மதுரையைத் திருமுருகாற்றுப்படையை நன்கு உணர்த்துகிறது.

தெருக்களின் அமைப்பும் மனை இலக்கணப்படிச் சிறப்பாக இருக்க வேண்டும். தெற்குப்பார்த்த மனை, வடக்குப்பார்த்த மனை, கிழக்குப்பார்த்த மனை, மேற்குப் பார்த்த மனை என்பதெல்லாம், மனைக்கு வீதி அமைவதை வைத்தே முடிவு செய்யப்படுகிறது.

“மனைக்கும் தெற்கே சாலை அமைந்தால் அது தெற்கு பார்த்த மனை ஆகும்.
மனைக்கும் மேற்கே சாலை அமைந்தால் அது மேற்கு பார்த்த மனை ஆகும்.
மனைக்கும் வடக்கே சாலை அமைந்தால் அது வடக்குப்பார்த்த மனை ஆகும்.
மனைக்கும் கிழக்கே சாலை அமைந்தால் அது கிழக்கு பார்த்த மனை ஆகும்”.(5)

கட்டடக்கலையில் அழகிய வேலைப்பாடுடைய கோட்டைகளும், உயர்ந்த மாளிகைகளும், சிறந்த தெருக்களும், நியாயமான, அமைதியான வணிகமும் நடைபெற்ற மதுரைக்கும் மேற்கே “திருப்பரங்குன்றம்” திகழ்ந்ததனால், மேற்படி சிறப்பம்சங்கள் நிகழ்ந்தன. “மாடம் மலி பச்ச மறுகிற் கூடம் குடவயின்” திருப்பரங்குன்றம் மிகச்சிறந்த பஞ்சபூத தலம் என்று கூறலாம்.

**சிறுபாணாற்றுப்படையில் கட்டிடக்கலையின் சிறப்பு:-**

அரசர்களையோ வள்ளல்களையோ புகழ்ந்து பரிசு பெற்ற மகிழ்ச்சியோடு திரும்புகிற புலவர், வழியில் இரவலன் ஒருவனை கண்டு, தனக்கு பரிசு கொடை வழங்கிய கோமானின் பெருமையையும்,அவர்தம் நாட்டுக்கு செல்லும் நடை வழியையும் கூறி, “நீயும் சென்று அவரைக் கண்டால் என் போல பரிசு பெற்று திரும்பலாம்” என வழிபடுத்தி அனுப்புவதே ஆற்றுப்படையாகும். ஆறு+படை=ஆற்றுப்படை, ஆறு-வழி, படை- படுத்துவது, ஆற்றுப்படை-வழிபடுத்துவது. ஆடல் மாந்தரும், பாடல் பாணரும், கருவிப் பொருநரும், விறலியரும் ஆகிய நாற்பாலரும் தாம் பெற்றுவந்த பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியவர்க்கு அறிவுறுத்த, அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை எல்லாம் பெறுமாறு கூறிய இலக்கியவகையே ஆற்றுப்படையாகும்.

**நல்லியக்கோடன் அமைத்த நகரின் அழகு:-**

“எரிமறிந் தன்ன நாவின் இலங்கெயிற்றுக்
கருமறிக் காதின் கவையடிப் பேய்மகள்…………(6)

நல்லியக்கோடனின் நகரத்தில் எப்போதும் திருவிழாக்கள் நடந்து கொண்டிருக்குமாம். அதனால் தெருக்களில் புழுதி ஏராளமாய் எழுமாம். அப்புழுதியை யானைகளின் மதநீர் அடக்குமாம்.அத்தகைய பெருமையை உடைய நகரம் என்று பாணன். நல்லியக்கோடனின் நகரத்தின் அமைப்பை கூறுகிறான்.

**நல்லியக்கோடனின் அரண்மனை அழகு:-**

“பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
கடவுள் மால்வரை கண்விடுத்தன்ன
அடையா வாயிலவன் அருங்கடை குறுகி”(7).

நகரின் விசாலமான வீதிகள் விளக்கப்பட்டன. அதிலும் யானைகள் நடந்துவரும் பாதைகளாக,நகர வீதிகள் அமைந்ததை எண்ணிப் பார்த்ததால், வீதிகள் கோணல்களாய் இல்லாமல்,நெடியதாய், நேராய் இருக்க வேண்டும் என்பது தெளிவாக அறியலாம்.

தனது மனையைச் சதுரிக்காமல், வீதி உரங்களில் மீதிமிருக்கும் இடத்தையும் அதனுடன் இணைத்து வீதி வளைவுகளுடன், வீட்டின் மதிற்சுவரும் வளைந்து, வீட்டின் சுவரும் நீண்டு அமைந்த மனைகளைக் காணும்போது,அதில் வசிப்பவர்களின் வாழ்க்கையும் கோணல்மானலாய், தெளிவற்றிருப்பதைக் காணமுடிகிறது.

"மணிநீர்வைப்பு மதிலொடு பெயறிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின்"(8)

நீலமணிகள் போலும் கழிகள் சூழ்ந்த ஊர்களையுடையதும், மதிலின் பெயரை பெற்றதுமான, குளிர்ந்த நீரையுடைய குளங்கள் சூழ்ந்த எயிற்பட்டினம். எழில் என்பது கோட்டை என பொருள்படுகிறது. இஞ்சி, மதில்,புரிசை, ஞாயில்,எயில் ஆகியவையும் கோட்டைக்கான பொருட்களே ஆகும்.பழந்தமிழர்களின் கட்டிடக்கலையில் கோட்டை அமைப்பு பற்றிய செய்திகள் பரந்து கிடக்கின்றன.

**ஐந்து நில மக்களின் வீட்டு அமைப்பு முறை:-**

அகன்ற பெரிய முற்றங்களை உடைய வீடும், முற்றங்களில் நிறைந்த நெல் மற்றும் பல தானியங்கள் உலறும் காட்சியும், புகார் நகர மக்களின் செல்வ செழிப்புக்கு சாட்சியாக கட்டியம் கூறும். இதை விளக்கும் பட்டினப்பாலைப் பாடல் பின்வருமாறு:-

"விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா
கொழும் பல்கடிச் செழும் பாக்கத்தூர்
குறும்பல் ஊர் நெடுஞ்சோனாட்டு"(9)

குறிஞ்சி நில வீட்டுக் கூரைகள் தினையறியப் பெற்ற தாளும், புல்லாலும் வேயப்பட்டுள்ளது.

" இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை" (10)

குறிஞ்சிப்பாட்டு (153)

**பெரும்பாணாற்றுப் படையும் கட்டடக்கலையும்:-**

புல்வேய்ந்த குடிசைக் கூரைகள் மீது வேங்கை பூச்செடிகள் படர்ந்து, மலர்கள் சொரிந்திருக்கும் காட்சி,கூரை முழுக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்டது போலத் தோற்றம் நல்கியதாக அகநானூறு குறிப்பிடுகிறது. இது குறிஞ்சிநில குடில் காட்சியாகும்.

"நிலாவின் இலங்கு மணல்மலி மறுகில்
புலால் அம்சேரி,புல்வேய் குரம்பை"(11).

**ஐந்து நில மக்களின் ஊரின் அமைப்பு:-**

"புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெலுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்……………."(12).

குதிர்கள் நிற்கும் முற்றமும், வரகு திரிகை நட்டு நிற்கும் பந்தரிணையும்,சிறிய சக்கரங்களுடன் கலப்பை சார்த்தியதாலே நெடிய சுவர் தேய்ந்த புகை சூழ்ந்த கொட்டில்களையும், வரகு வைக்கோலால் வேயப்பட்ட அழகிய குடியிருப்பினையும் மேற்படி பாடல் மூலம் அறிய முடிகிறது.

சிறுதேர்களை உருட்டி விளையாடும் உழவரின் மக்கள்,கலளப்பு நீங்க, செவிலித்தாய் மார்பில் பாலை நிறைய உண்டு,. நல்ல இல்லங்களில் அமைந்த படுக்கையில் துயில் கொள்ளும் காட்சியைப் பெரும்பாணாற்றுப்படை படம்பிடித்துக் காட்டுகிறது.

**நற்றிணையில் கட்டிடக்கலை:-**

விசும்பும் நிலமும் முழுமுதற் பொருளே என்பதும்,வெளியிலிருந்து வளியும்,வளியிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் வந்தன என்பதும் தெளிவாகிறது.

**முடிவுரை**:-

சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள நகர அமைப்பு, வீதிகளின் அமைப்பு,வாயில்கள், மதில்கள் அரண்மனைகள், கோட்டைகள் சுருங்கைகளின் அமைப்பு பற்றிய பல்வேறு கட்டுமான வடிவங்களை, மனை இலக்கண விதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தபோது பல உண்மைகள் அறியப்பட்டன.

ஊரும், நாடும், நகரமும் பஞ்சபூதங்களின் ஆற்றல்திறனால் பெறுகிற அழகைக் காணமுடிந்தது.வீட்டின் முற்றங்களும், கலை நயமிக்க குடில்களும் சங்க இலக்கியக் காட்சிகளாக மிளிருகின்றன. வீட்டிற்குள் கதவுகளும்,தானியம் சேர்த்து வைக்கும் குதிர்களும், இவைகளின் அமைப்பும்,மனை இலக்கண விதிகளுக்குப் பொருந்தி வருவதைக் காணமுடிந்தது. வீட்டைச் சுற்றிலும் வேலிகள் அமைக்கப்பட்டது போல,அகழிகள் அரண்மனையின் பாதுகாப்பு அரண்களாக விளங்கி நிற்பதும்,குறிஞ்சி,முல்லை ,மருதம், நெய்தல், பாலை என ஐந்து நில மக்களின் வீட்டமைப்பும் விளக்கமாக அறியப்பட்டது.

**அடிக்குறிப்புகள்**:-

[1.] பொ.வே. சோமசுந்தரனார் -பத்துப்பாட்டு மூலமும் உரையும் – ப.34.
[2.] மேலது,  பல.73.
[3.] தொல்காப்பியம் பொருளதிகாரம்-நூற்பா.1446.
[4.] திருமுருகாற்றுப்படை-வரி68,69.
[5.] 5 .என்னம்மங்களம் பழநிசாமி-வாழ்வு தரும் வாஸ்து-ப.114,115.
[6.] சிறுபாணாற்றுப்படை-பாடல் வரிகள் 196,97.
[7.] மேலது வரி 203-206.
[8.] மேலது வரி 209-210 .
[9.] பட்டினம் பாலை- வரி 26-28.
[10.] குறிஞ்சிப்பாட்டு 153.
[11.] அகநானூறு பாடல் 121, வரி 8-11.
[12.] பெரும்பாணாற்றுப்படை வரி 147,148.